[illegible]
யாழ்ப்பாணம்

யாழ். நகர் நோக்கி நேற்று அதிகாலை

கடும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர், ஊர்காவற்றுறை, மண்டைதீவு ஆகிய இடங்களில் உள்ள படை முகாம்களிலிருந்து யாழ். நகரை நோக்கி நேற்று அதிகாலை 3-30 மணிக்கு பலத்த ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

அநேகமான 'ஷெல்'கள் முற்றவெளியை அண்டிய பிரதேசங்களிலும் நாவாந்துறை, குருநகர் ஆகிய இடங்களிலும் வீழ்ந்து வெடித்தன. பாதுகாப்பு வலயத்தில் இருந்து பத்து யார் தூரமுள்ள யாழ். கன்னாதிட்டி வீதி

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL' TAMIL DAILY'

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 5 இதழ் 7
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 17—02—1992

முக்கிய ஊரடங்கென இராணுவ பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

யாழ். குடாவில் தற்போது அமுல்செய்யப்பட்டுள்ள 'ஊரடங்குச் சட்டம்' மிகமுக்கியமான தொன்றாகுமென இராணுவ பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வூரடங்கு ஆக்குறைந்தது நாளை செவ்வாய்க்கிழமை

(4-ம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு உதவிகளை ஆராய

சர்வதேசகுழு இலங்கைவிஜயம்

(லண்டன்)

இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைத்துவரும் கடன் உதவிகளையும் நிதி உதவிகளையும் இலங்கை அரசு உரிய விதத்தில் பயன்படுத்தி வருகிறதா என்பதை கண்டறிவதற்கு சர்வதேச நிதி அமைப்பைச் சேர்ந்த உயர்மட்டக்குழு ஒன்று கொழும்பு வந்துள்ளது.

இந்தக்குழு நிதியமைச்சர், நிதிஅமைச்சின் உயரதிகாரிகள் ஆகியோரை சந்தித்து இலங்கை வெளிநாட்டு நிதி உதவிகளையும் கடன்களையும் எவ்வாறு பயன்படுத்தி வருகிறது என்பதுபற்றி ஆராயும்.

நாட்டின் வடக்கு கிழக்கு பிரச்சினை தீர்க்கப்படாமை மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருவது பற்றி முறைப்பாடுகள் கிடைத்திருப்பவையடுத்தே

(4-ம் பக்கம் பார்க்க)

திருமலை கிராமங்கள் படையினரால் சேதம்

(திருகோணமலை)

கடந்த புதன்கிழமை திருகோணமலையில் உள்ள முட்டுச்சேனை வாளித்தோட்டம், வெருகல், முகத்துவாரம்,

(4ம் பக்கம் பார்க்க)

தனிச் சிங்களத்தில் நியமனக் கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள பட்டதாரி பயிற்சி ஆசிரியர்களுக்கு தனிச்சிங்களத்தில் பரீட்சைத் திணைக்களம் நியமனக்கடிதம்

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கைத் தமிழ்

உண்ணாவிரதிகள் ஐவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(சென்னை)

தமிழ் நாடு செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள புழல் விசேடமுகாமில் கடந்த சில நாட்களாக காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வந்த ஐந்து இலங்கைத் தமிழ் அகதிகள் மயக்கமடைந்த நிலையில் கடந்த வாரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

அரசியல் கைதிகள் என தங்களைக் கருதி ஒரு பண்பான வாழ்க்கைக்கு அனுமதிக்க

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியத் தூதுவர் ஜாவுக்கு கொழும்பில் பாதுகாப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. நாகேந்திரநாத் ஜாவுக்கு கொழும்பில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. இந்திய எல்லைப் படையைச் சேர்ந்த 80 படையினர் தூதுவரின் பாதுகாப்புக்காக விசேடமாக அமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளையில் கொழும்பிலுள்ள இந்தியதூதுவராலயத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியத் தூதுவராலயம் தமது ஊழியர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் பாதுகாப்பு வசதிகளை வழங்கியுள்ளது. அத்துடன் இலங்கை இராணுவத்தினரும் தூதுவராலய உத்தியோகத்தர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கிவருகின்றனர்.

(மா)

திருமலையில் புதிதாக

குடியேற்றப்பட்ட சிங்களவர்

சொந்த இடங்களுக்கு திரும்புகின்றனர்

(கொழும்பு)

திருகோணமலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றப்பகுதிகளில் இருந்த பெரும்பான்மை மக்கள், தங்கள் சொந்த ஊர்களான களுத்துறை, ஹொரண, அநுராதபுரம், தம்புத்தேகம போன்ற இடங்களுக்குத் திரும்பிச் செல்கின்றனர்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.டி.எஸ். குணவர்த்தன, ஜனாதிபதி பிரேமதாசவுக்கு அனுப்பி வைத்துள்ள தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குடியேற்றத் திட்டங்களைச் சர்வோதயம், பௌத்த சிங்கள இயக்கம் போன்ற அமைப்புக்கள் நிவாரணங்களை வழங்கி உருவாக்கினார்கள்.

பெரும்பாலான குடியேற்ற வாசிகள் தங்களுக்குக் கிடைத்த நிவாரணங்களையும், பண

(4ம் பக்கம் பார்க்க)

புலிகளின் கடிதம் கிடைத்ததாக

தொண்டா தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடமிருந்து நீண்டதொரு கடிதம் தமக்கு கடந்த வியாழக்கிழமை கிடைத்ததாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இக்கடிதத்தை புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதியுள்ளதாகவும் அவரை யாழ்ப்பாணத்தில் சந்தித்த சிலர் இக்கடிதத்தை தம்மிடம் கையளித்ததாகவும் திரு. தொண்டமான் கூறினார்.

நான் தெரிவித்த சில யோசனைகளை புலிகள் வரவேற்றிருந்தனர். வேறு பல யோசனைகளை முற்றுமுழுதாக எதிர்த்திருந்தனர் என்று தெரிவித்த அமைச்சர் வேறு விபரங்கள் எதனையும் வெளியிடவில்லை.

(இ)

தொண்டமான் சிரேஷ்ட தேசியத் தலைவர்

(மாத்தளை)

"இந்த நாட்டில் சிங்களத் தலைவர்கள் மௌனம் சாதிக்கையில், தமது இனத்துக்காகக் குரல் கொடுக்கும் திரு. தொண்டமான் சிரேஷ்ட தேசியத் தலைவர் என்று கூறுவேன்"

இவ்வாறு [illegible] பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சபையின் உப தலைவர் உபாலி வணிகசார குறிப்பிட்டார்.

அமைச்சர் தொண்டமானின் ஆலோசனையை உதாசீனம் செய்வது, மார்ட்டின் விக்கிரமசிங்காவின் உபதேசங்களைப் புறக்கணிப்பது போன்றதாகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழ் கிராமங்களில் சிங்கள மக்களை குடியேற்ற முயற்சி

(வவுனியா)

வவுனியாவிலுள்ள இரு தமிழ் கிராமங்களில் சிங்கள மக்களைக்குடியேற்ற முயற்சி நடைபெற்று வருவதாக தெரியவருகிறது.

இம்மாவட்டத்திலுள்ள தோணிக்கல், தேக்கவத்தை ஆகிய இடங்களிலேயே மீளக்குடியமர்வு என்ற போர்வையில் சிங்களவர்களை குடியமர்த்த இரவோடு இரவாக துரித ஏற்பாடுகள் நடக்கின்றன.

சுமார் 150 சிங்களக் குடும்பங்கள் இப்பகுதியில் குடியேற்றப்படவுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ)

தொண்டர் ஆசிரியர் சேவை
நிபந்தனைகளை மீள் பரிசீலிக்கவும்

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர் சேவையில் சேர்ப்பதற்கு அரசுவிதித்துள்ள நிபந்தனைகளை மீள்பரிசீலனை செய்யவேண்டுமென அமைச்சர் செல்லச்சாமி கோரியுள்ளார்.

ஜனாதிபதிக்கு எழுதிய கடிதமொன்றிலேயே அமைச்சர் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அரசு விதித்துள்ள பல முன் நிபந்தனைகளால் நியாயமான முறையில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் பாதிப்பிற்குள்ளாகியிருப்பதாகவும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ)

அகதிகள் குடும்பங்களுக்கு 57 வீடுகள்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட வை. எம். சி. ஏ. களின் ஒன்றியம் மருதனார்மடம் [illegible] சேவா ஆச்சிரமத்தில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த அகதிகள் குடும்பங்களுக்கு 57 சிறிய வீடுகளை அமைத்துக்கொடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள வை. எம். சி. ஏ. யின் தேசிய சபை பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. க்கு ஊடாக வழங்கிய இரண்டு லட்சம் ரூபா நிதியைக்கொண்டு இந்த வீடுகள் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மருதனார்மடம் [illegible] சேவா ஆச்சிரமக் காணியில் நிறுவப்பட்ட இந்த வீடுகளை ஆச்சிரமத்தின் பொருளாளர் வண. சாம் அல்பிரட் அவர்கள் இம்மாதம் 8ம் திகதி அன்று அகதிக் குடும்பங்களுக்கு சம்பிரதாய முறைப்படி கையளித்தார். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 250 ரூபா பெறுமதியான சாமான்களும் வழங்கப்பட்டது. (72)

ராக்கிங் எதிரொலி
21 மாணவர்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு மருதானை தொழில்நுட்ப கல்லூரியில் புதிய மாணவர்களை ராக்கிங் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 21 சிரேஷ்ட மாணவர்கள் கல்லூரியிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக கல்லூரியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

800 சிரேஷ்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் கால வரையறையின்றி ஒத்திப்போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

சக்திவாய்ந்த குண்டுகள் சீனன்குடாவில் வெடித்தன
பி. பி. ஸி. தகவல்

(லண்டன்)

இலங்கையின் முன்னாள் பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் கொலைக்குப் பயன்படுத்திய வெடிகுண்டை விட மிகவும் சக்திவாய்ந்த குண்டுகள் சீனன்குடா விமானப்படைத்தளத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பின் போது வெடித்ததாக பி. பி. ஸி. தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

மேற்படி விமானப்படைத் தள குண்டுவெடிப்பில் பல வெடி மருந்துக் கிடங்குகள் பலத்த சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டு சுமார் 80 கிலோ எடையுள்ளது. அதைவிட அதிக நிறையுடைய பெருமளவு குண்டுகள் இங்கு வெடித்துள்ளன. இதனால் விமானத் தளத்திற்கு மிகப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. (அ)

கிளிநொச்சியில் 800 ஆசிரியர் பற்றாக்குறை

(புலோலி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் 800 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய முக்கிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களின் பற்றாக்குறையே அதிகமென கிளிநொச்சி கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (61)

சேவையிலிருந்து
ராஜினாமா செய்தால் ஒய்வூதியம் கிடையாது!

(கொழும்பு)

"ஓய்வூதியத்துக்கு உரித்துடைய ஒருவர் சேவையிலிருந்து ராஜினாமா செய்திருந்தால் பின்பு அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது" என்று ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: [illegible]பத்தின் பேரில் ஒருவர் இளைப்பாறும் 44/90 சுற்றுநிருபத்தின் பிரகாரம் 18-10-90 முதல் நாள் சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருந்தால் கூட அந்த சுற்றுநிருபத்தில் உள்ள சலுகைகள் எவையும் வழங்கப்படமாட்டாது.

சிலர் ஏற்கனவே திருமணம் செய்திருந்தும், ஓய்வுபெற்ற பின்புதான் திருமணத்தை பதிவுசெய்கிறார்கள். இவர்களுக்கும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதி வழங்கப்படமாட்டாது.

ஒரு கணவனின் ஓய்வூதியத்தை மனைவி பெற்றுக்கொண்டிருந்து அவரும் இறந்துவிட்டால் அந்த தாயாரின் மகன் 21 வயதுக்கு கீழிருந்தால் அவர் ஓய்வூதியம் பெற உரித்துடையவர்" என்றார். (152)

JAM போத்தல்கள் தேவை

ஜாம் (Jam) புரூட்டினேக்ஸ், சிவா, ஹார்லிக்ஸ், போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படும்.

Taste Line Industries(Pvt)Ltd
No. 14, Seenier Lane, Jaffna,

குறிப்பு: JAM போத்தல்கள் தொடர்ச்சியாக கமிஷன் அடிப்படையில் விநியோகம் செய்யக் கூடியவர்கள் தேவை. (எ-1930)

முன்னாள்
அதிபருக்கு பாராட்டு விழா

(பண்டத்தரிப்பு)

யாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் முன்னாள் அதிபர் டாக்டர் ப. உரோமகேசரனுக்கு மேற்படி கல்லூரி மாணவர் மன்றத்தினரால் அண்மையில் பாராட்டுவிழா ஒன்று நடத்தப்பட்டது.

இவ்விழாவுக்கு தலைமை வகித்த கல்லூரியின் அதிபர் டாக்டர் காந்தன் இன்னாசித்தம்பி பாராட்டுரை வழங்குகையில்; சித்தஆயுர்வேத வைத்தியத்துறைக்கு அவர் ஆற்றிவரும் பணிகளை பாராட்டினார். கல்லூரியின் தேவைகள் அடங்கிய மகஜர் ஒன்று மாணவர் மன்ற காப்பாளர் டாக்டர் பி. இராமநாதனால் சமர்ப்பிக்கப்பட்டது. மாணவர் மன்ற பிரதிநிதிகளும் உரைநிகழ்த்தினார்கள். (72)

இராமகிருஷ்ணரின்
ஜெயந்திவிழா

(யாழ்ப்பாணம்)

பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜெயந்திவிழா இம்மாதம் 19ம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபர் திரு. கி. சிவசரவணபவன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில், கொழும்புத்துறை சர்வோதயத்தைச் சேர்ந்த திரு. திருநாவுக்கரசு பகவானின் வாழ்வும் பணியும் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். கல்லூரி மாணவர்களின் பேச்சு, பஜனை, கலை நிகழ்ச்சிகள் ஆகியனவும் விழாவில் இடம்பெறும்.

கொத்தணி அதிபர்

(பருத்தித்துறை)

கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி அதிபர் திரு. எஸ். சிற்றம்பலம் கல்வித்திணைக்களத்தால் கொத்தணி அதிபராகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளார். நெல்லியடி கொத்தணி அதிபராக நியமிக்கப்பட்டுள்ள திரு. சிற்றம்பலம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார். (52)

பரீட்சை

(கொழும்புத்துறை)

பொது எழுதுநர் சேவையின் தரம் IIம் வகுப்பின் 'அ' பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைப் பரீட்சை எதிர்வரும் 22ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (154

களனியில் புதிய பாலம்

(கொழும்பு)

கொழும்பு களனிஆற்றுக்கு மேலாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலம் இம்மாதம் 23ம் திகதி ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

பழைய விக்டோரியா பாலத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள இப்புதிய பாலத்துக்கு 76 கோடி 50 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (வி)

மணற்காடு
வித்தியாலயம் வெற்றி

(பருத்தித்துறை)

நகர்கோவில் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் சிரேஷ்ட வித்தியாலயம் வெற்றியீட்டியது.

வடமராட்சி கல்விக்கோட்ட மட்டத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்திலும் உடுப்பிட்டி கொத்தணியுடன் மோதிய மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் சிரேஷ்ட வித்தியாலயம் வெற்றியீட்டியது.

இடம்பெயர்ந்த
மாணவருக்கு சீருடைகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் தஞ்சமடைந்த பளை, திருகோணமலைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துவந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஏழுலட்சத்து 30ஆயிரம்ரூபா பெறுமதியான சீருடைகள், பாடசாலை உபகரணங்கள் கனடா உயர் ஸ்தானிகராலயத்தால் வழங்கப்பட்டுள்ளது.

குணா கப்பலில் வந்துள்ள இவ்வுபகரணங்களை அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983 பொறுப்பேற்று பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கவுள்ளது. (ச)

மரக்கறி விலை வீழ்ச்சி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தையில் மரக்கறிகளின் விலைகள் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளன.

தக்காளிப்பழம் கிலோ ஒன்று மூன்று ரூபாவாகவும், கத்தரிக்காய் கிலோ 12 ரூபாவாகவும், கோவா கிலோ 8 ரூபாவாகவும் விற்கப்படுகின்றது.

இதேவேளை உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட [illegible], போஞ்சி என்பனவும் அதிகளவில் சந்தைக்கு விற்பனைக்கு வந்துள்ளதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. (72)

சித்திரப்போட்டி

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவிலுள்ள ஆசிரியர்களுக்கிடையேயான சித்திரப் போட்டி ஒன்று [illegible] திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்ளவிரும்பும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 30ம் திகதிக்கு முன்னர் கொத்தணி அதிபரூடாக கோட்டக்கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசன் கேட்டுள்ளார். வெற்றி பெறும் ஆசிரியர்களுக்குத் தகுந்த பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (139)

குடும்ப
அட்டைகள் பதிவு

(வேலணை)

யாழ். குடாநாட்டில் தங்கியுள்ள தீவகப்பகுதி தெற்கு பிரதிச் செயலாளர் பகுதிக்குட்பட்ட பொதுமக்கள் அனைவரும் தங்கள் தங்கள் குடும்ப [illegible] பதிவுசெய்து கொள்ளும் குடும்ப அட்டைகளை உடனடியாக தத்தமது கிராமசேவை அலுவலர்களிடம் எதிர்வரும் 19ம் திகதிக்குமுன் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (75)

மில்லர் இல்லம் முதலிடம்

[புலோலி]

பளை சோரன்பற்று கணேச வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர்போட்டியில் மில்லர் இல்லம் முதலாம் இடத்தையும், திலீபன் இல்லம் இரண்டாம் இடத்தையும் போசி இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

வித்தியாலய அதிபர் திருமதி இ. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொன். சபாபதி கலந்து கொண்டார். (61)

பயிற்சி வகுப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலையில் பயிற்சிபெற்றுவரும் தாதி பயிற்சி மாணவர்கள் மனநோய்சம்பந்தமான பயிற்சி வகுப்பினை இம்முறை மாவிட்டபுரத்தில் இயங்கும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் பெற்றுவருகின்றனர்.

இதற்குமுன்னர் இத்தகைய பயிற்சி வகுப்பினை முல்லேரியா மனநோய் வைத்தியசாலையில் பெற்று வந்தனர்.

இம்முறை இம்மாணவர்கள் போக்குவரத்து பிரச்சினையால் அங்குசென்று பயிற்சி பெற முடியாதுள்ளது. (56)

உதைபந்தாட்ட தெரிவுப்போட்டி

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான உதைபந்தாட்ட தெரிவுப்போட்டி [illegible] அடுத்தவாரம் நடைபெறவுள்ளது.

இப்போட்டி பண்டத்தரிப்பு கல்விக்கோட்டத்திலுள்ள இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், குளமங்கால் றோ. க. த. க. பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, வட்டு இந்துக்கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஆகிய எட்டுப் பாடசாலைகளுக்கிடையே நடைபெறும். (189)

இலவச விநியோகம்

[பண்டத்தரிப்பு]

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு செஞ்சிலுவைச் சங்க இளையோர் விவசாயிகளுக்கு எள்ளு, பயறு, கத்தரி விதைகளை இலவசமாக வழங்கி வருகின்றனர்.

வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்குமுகமாக அதற்கான மரக்கறி விதைகளையும் வழங்கிவருகின்றனர். (72)

இராணுவம் நிலைகொண்டுள்ள இடங்களிலிருந்து பல லட்சம் மக்கள் அகதிகளாக வெளியேறி வெவ்வேறு தமிழ்பகுதிகளில் தஞ்சமடைந்தனர்

பி. பி. ஸி. விமர்சனம்

(கொழும்பு)

"ஜனாதிபதி பிரேமதாஸ தன்னை ஒரு சமாதான விரும்பி எனவும், தீர்வொன்றை தேடுபவர் எனவும் காட்டிக்கொள்கிறார். ஆனால் அவர் மிகவும் தீவிரமானவராகவும் சிங்கள தேசியவாதத்திற்கு குரல் கொடுப்பவராகவும் இருக்கின்றார்".

இவ்வாறு பி.பி.ஸி.யின் கொழும்பு நிருபர் திரு கிறிஸ் மொறிஸ் பி.பி.ஸி.யின் உலக சேவையில் ஒலிபரப்பான இன்றைய உலகம் (வேர்ல்ட் ருடே) நிகழ்ச்சியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்; இனவாதத்தை பரப்புவதில் கொழும்பு பத்திரிகைகள் குறிப்பாக சிங்கள பத்திரிகைகள் முக்கிய பங்காற்றுகின்றன. அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள் சிங்கள இனவாதத்திற்கு முக்கிய காரணமாக இருக்கின்றன.

1983க்கு பின்னர் இதனை தெளிவாகக் காணலாம். வேறு பிரச்சினைகளில் சிங்கள இனவாதத்தை தூண்டிவிடக் கூடிய விதமாக இவர்கள் நடுநிலையில் இருந்தும் விலகி நடந்துள்ளனர்.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதை பெரும்பாலான சிங்கள மக்களும், அரசுடன் கூட்டாக இயங்கி வரும் தமிழ்க் குழுக்களும் விரும்பவில்லை.

அமைச்சர் தொண்டமான் முன்வைத்த சமாதான திட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்கள் முன்வைக்கப்பட்டன. புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ் நகருக்குச் செல்ல அவர் விரும்புகிறார். ஆனால் தென்னிலங்கை அரசியல் உணர்வை சமாளிக்கலாம் என அவர் நினைத்தார்.

நிச்சயமாக இதுஒரு நோக்கம் எனக் குறிப்பிடும் ஜனாதிபதியின் ஆலோசகர் பிரமன் வீரக்கோன், ஏனென்றால் இதை நாம் நிறைவேற்றியிட்டால் நிராகரிக்க முடியாத ஒரு சிக்கலான நிலைக்கு புலிகளை தள்ளிவிடலாம் என்று அதற்கு விளக்கமும் கூறுகின்றார்.

வடக்கு-கிழக்கில் இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளிலிருந்து வெளியேறி அகதிகளாக பல லட்சம் மக்கள் வெவ்வேறு தமிழ் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களே தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்லமுடியாதிருக்கையில் பல நாடுகளுக்கு அப்பால் தமிழகத்திலிருந்து இங்கு அகதிகளைக் கொண்டுவந்து இறக்குவது விநோதமாக இருக்கிறது.

நாட்டின் பிரச்சினை சகல வழிகளிலும் தொடர்கிறது. இதற்கு தீர்வொன்று முடியாதா என்றதொரு கேள்வி தற்போதுஎழுந்துள்ளது. நாட்டில் யுத்தம் முடிவடைந்து சமாதானம் தோன்றினால் பொருளாதார நிலை நன்கு மேம்படும். இதன்மூலம் அடுத்த தேர்தலில் வெற்றிபெற முடியுமென ஆட்சியாளர்கள் கருதுவதால் இதற்கு ஏதாவது ஒரு விரைவான தீர்வைக் காண முற்படுவார்கள் என்றும் தெரிவித்தார். (இ)

6 முக்கிய புள்ளிகளை கொல்ல திட்டமாம்

(கொழும்பு)

இலங்கையில் 6 முக்கிய புள்ளிகளை கொலை செய்ய புலிகள் திட்டமிட்டிருந்தது தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளதாக அரசு தரப்பு கூறியதாக 'சண்டே டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலர், கூட்டுப்படைத் தளபதி, பொலிஸ் மா அதிபர், விமானப் படைத்தளபதி போன்றோரையே கொல்லத் திட்டமிடப்பட்டிருந்ததாம்.

தற்போது புலிகளின் குண்டு நிபுணர் ஒருவர் கொழும்பு வந்துள்ளதாகவும் அவர் தேடப்பட்டு வருவதாகவும் அச்செய்தி தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் 6,76,681 அடையாள அட்டைகள் விநியோகம்

(கொழும்பு)

1991ம் ஆண்டில் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் 6,76681 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பத்துல குணதிலக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; இதுவரை வருடாந்தம் 4,00000 அடையாள அட்டைகள்தான் சாதாரணமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நடமாடும் சேவைகளிலும் ஏராளமான அடையாள அட்டைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

காணாமல்போன தொலைந்த அடையாள அட்டைக்கு 288 000 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரபரீட்சைக்கு தோற்றும் மாணவர்களிடமிருந்து அடையாள அட்டைக்காக 60,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்றார். (152)

இராசி பலன்

17/2/1992

திங்கட்கிழமை

தமிழுக்கு மாசி 5.

சதுர்த்தசி பி.ப 4-37, ஆயில்யம் அதிகாலை 5-31 வரை, சித்தயோகம் இராகு காலம் காலை 8-03 முதல் 9-33 வரை, சுபநேரம் பகல் 12-33 முதல் 3-03 வரை.

மேடம்-நம்பிக்கை குறைவு, நெஞ்சுவலி, பணமுடை.

இடபம்- பந்துகூட்டம், நிறைபேறு மனமகிழ்ச்சி.

மிதுனம்-சோர்வு, தொழில் நஷ்டம் விசாலம்.

கடகம்- அதிகாரம், காரிய சித்தி, புதியஸ்தானம்.

சிங்கம்- வயோதிபர் தொல்லை, அச்சம், வெறுப்பு.

கன்னி- மனக்கிலேசம், வேண்டாதபணி, [illegible].

துலாம்- மித்திரர் உதவி, குடும்ப சிறப்பு, பாராட்டு.

விருச்சிகம்- விருந்தினர் வருகை, வாகனசிறப்பு, பணவரவு.

தனுசு- பிதிர்கருமம், அதியோசனை, பயணம்.

மகரம்- விநோத சிந்தனை, புதிய முதலீடு, புத்திரர் சிறப்பு.

கும்பம்- காரிய சித்தி, வேலைப்பளு, பொதுப்பணி.

மீனம்- வாக்குவாதம், அஞ்ஞானவாசம், குடும்பகை.

-ஜோஸ்யன்

இந்து சமயப் பேரவையின் சமூக அபிவிருத்தி நிதியம்

நாளை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமயப் பேரவையினர் ஏழைகள், ஆதரவற்றோர், அனாதைகள், விதவைகளுக்கு உதவி வழங்கவென 'இந்து சமய சமூக அபிவிருத்தி நிதியம்' ஒன்றை நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நல்லை ஆதீனத்தில் அங்குரார்ப்பணம் செய்யவுள்ளனர்.

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் இவ் அங்குரார்ப்பண வைபவம் ஆரம்பமாகும்.

இதற்கு சகல ஒத்துழைப்பும் வழங்குமாறு இந்துசமயப் பேரவையினர் கேட்டுள்ளனர்.

சைவப் புலவர் பரீட்சை

(வட்டுக்கோட்டை)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடாத்தும் இளம் சைவப்புலவர்பரீட்சைகள் இம் மாதம் 21ம் திகதி முதல் 23ம் திகதி வரை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (139)

கொழும்பில் சவுதி தூதரகம்

(கொழும்பு)

சவுதி அரேபிய தூதரகம் விரைவில் கொழும்பில் திறக்கப்படவிருக்கிறது. (க)

வவுனியா முழுவதும் மின்சாரம் கிடைக்கும்

(வவுனியா)

வவுனியா மாவட்டம் முழுவதுக்கும் அடுத்த வருடத்திற்குள் மின்சாரம் கிடைக்கும். இதற்காக அரசு 33மில்லியன் ரூபாவை செலவு செய்யவுள்ளது.

இவ்வாறு மின்சக்தி வலு அமைச்சர் கே.டி.எம்.சி. பண்டார பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

மின்சார அபிவிருத்தியின் முதற்கட்ட வேலையாக வவுனியா நகரின் சகல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது இவ்வேலைகள் இரு மாதங்களுக்குள் முடிவடைந்து விடும்.

2-வது கட்ட வேலையாக மின்சாரத்தை பெற்றுக் கொள்ளாத வீடுகள், வர்த்தக நிலையங்கள் பாடசாலைகள் போன்றவற்றுக்கு மின்சாரம் வழங்குதல்.

3வது கட்ட வேலையாக வவுனியா மாவட்டத்தில் பல கிராமங்களுக்கும் மின்விநியோகத்தை ஏற்படுத்துவது என்றும் அமைச்சர் பண்டார மேலும் தெரிவித்தார். (வி)

கர்நாடக வன்முறையில்

ஒன்றேகால் லட்சம் தமிழர் உடைமைகளை இழந்தனர்

(சென்னை)

கர்நாடக மாநிலத்தில் தமிழர்களுக்கு எதிராக ஏற்பட்ட வன்செயல்களில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் தமிழ் மக்கள் தமது (உடைமைகளை) இழந்து தமிழகம் வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் சிறிய தொகையினரே மீண்டும் கர்நாடகம் செல்ல உடன்பட்டுள்ளனர்.

இதேவேளை காவிரி நீர்ப் பிரச்னை தொடர்பான நடுவர் மன்ற தீர்ப்பினை மறுபரிசீலனை செய்வதற்கு தமிழகம் ஒருபோதும் உடன்படக்கூடாது என தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி கூறியுள்ளார்.

இடைக்கால ஆணையை மறுபரிசீலனை செய்வதற்காக கர்நாடக முதலமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்பதை தமது கட்சி எப்போதும் ஏற்றுக்கொண்டதில்லை என்றும் அவர் கூறினார். (கே)

கட்டாக்காலி

நாய்கள் அழிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில்நீண்டகாலமாக தொல்லைகொடுத்து வந்த கட்டாக்காலி நாய்கள் பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் திரு. எம். இராசதுரை மேற்கொண்ட முயற்சியினால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டன. [72]

20 தமிழ் இளைஞர் காவத்தையில் கைது

(கொழும்பு)

வடபகுதிதீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் 20 தமிழ் இளைஞர்கள் காவத்தை பகுதியில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதனைத் தொடர்ந்து அரசுக்கு சொந்தமான 12 தோட்டங்கள் பொலிசாரின் கடும் கண்காணிப்பில் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

கம்பன் விழா இறுதி நாள் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் 'கம்பன் விழா'வின் இறுதிநாளான இன்றைய காலை நிகழ்ச்சியில் வண. கலாநிதி ஏ.ஜே.வி. சந்திரகாந்தன் தலைமையுரையையும், திரு வே. பொ. பாலசிங்கம் தொடக்கவுரையையும் நிகழ்த்துவர்.

இதையடுத்து இலக்கணவித்தகர் க. நமசிவாயதேசிகர் தலைமையில் 'கம்பனின் குறள் விளக்கம்' எனும் தலைப்பில் கருத்தரங்கு நடைபெறும். இதில் வித்துவான் சி. குமாரசாமி, திரு. ச. வே. விநாயகமூர்த்தி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர்.

மாலை நிகழ்ச்சியில் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் தலைமையுரையையும், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நிறைவுரையையும் நிகழ்த்துவர்.

இதையடுத்து மேன்முறையீட்டு பட்டிமன்றம்' நடைபெறும். இதற்கு திரு. க. சொக்கலிங்கம், திரு. க. சிவராமலிங்கம், வித்துவான் சி. குமாரசாமி ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றுவர். விழாவின் முதல்நாள் நிகழ்ச்சியில் நடைபெற்ற பட்டிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து மேன்முறையீடுசெய்யப்படும்.

முதித்தரப்பு மேலவர்களாக திரு இ. ஜெயராஜ், கலாநிதி [illegible] செ. சுந்தரம்பிள்ளை, திரு. சோ. பத்மநாதன் ஆகியோர் வாதிடுவர். (இ)

மனித உரிமைகள் ஆணைக்குழு அமைக்க இந்தியா ஆராய்வு

(புதுடில்லி)

இந்தியாவில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கென இந்திய அரசாங்கமே மனித உரிமைகள் ஆணைக்குழு ஒன்றை அமைப்பது பற்றி ஆராய்ந்து வருகிறது.

லண்டனில் தலைமை அலுவலகத்தைக் கொண்ட "சர்வதேச மன்னிப்புச்சபை", அமெரிக்காவில் தலைமை அலுவலகத்தைக் கொண்ட 'ஏஷியா வோச்' என்ற வெளிநாட்டு மனித உரிமைகள் அமைப்புக்கள் பற்றி இந்தியா நீண்டகாலமாக கண்டனம் தெரிவித்து வந்தது.

இந்த அமைப்புக்கள் நியாயமற்ற முறையில் இந்தியாவை கண்டிப்பதாகவும், இந்தியாவில் உள்ள மனித உரிமைகள் அமைப்புக்களும் அரசியல் சார்புடையதாக விளங்குவதாகவும், இதனால் இந்திய அரசாங்கமே மனித உரிமைகள் அமைப்பை நிறுவ உத்தேசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரே)

காவிரி நீர் பிரச்னை:

ராவ் தலைமையில் இன்று பேச்சுவார்த்தை

(புதுடில்லி)

காவிரி நீர் பிரச்னை தொடர்பாக பிரதமர் நரசிம்மராவ் தலைமையில் இன்று திங்கட்கிழமை புதுடில்லியில் பேச்சுவார்த்தை ஆரம்பமாகின்றன. இதில் கலந்துகொள்வதற்காக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று சென்னையிலிருந்து புறப்பட்டு வந்துள்ளார். (ரே)

நாடாளுமன்ற தெரிவுக் குழு எப்பொழுதும் யாழ் வரலாம்

(கொழும்பு)

இனப்பிரச்னை விவகாரத்தை ஆராய்ந்துவரும் நாடாளுமன்ற தெரிவுக்குழு யாழ்ப்பாணத்துக்கு எப்பொழுதும் வரலாம். அந்தத் தெரிவுக்குழுவை வரவேற்க நாம் தயாராகவே இருக்கிறோமென்று விடுதலைப் புலிகளின் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த "குவேக்கர்ஸ் சமாதானக்குழு"விடம் தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்தைச் சேர்ந்த திரு: இராமமூர்த்தி தலைமையில் யாழ்ப்பாணத்தில் புலிகளின் தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய இக்குழுவினர் கடந்த வியாழக்கிழமை கொழும்பு திரும்பினர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயா, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், செயலாளர் நாயகம் யோகரத்தினம் யோகி ஆகியோருடன் இக்குழு பேச்சுவார்த்தைகள் நடத்தியது.

இச்சந்திப்பின்போது இனப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வொன்றைக்காண அரசுடனும் பேச நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம்; அரசாங்கம் தான் அதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்த புலிகள் தலைவர்கள் மேலும் கூறியதாவது;

அமைச்சர் தொண்டமான் எமது நம்பிக்கைக்குரியவராக இருக்கிறார்; எனவே அவர் எப்பொழுதும் இங்குவரலாம். அரசு திட்டவட்டமாக எவ்வித யோசனைகளை முன்வைக்க விரும்புகிறதோ அந்த யோசனைகளுடன் தொண்டமான் எப்போதும் இங்கு வரலாமென்றும் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

ஐ.நா. அமைதிப் படையை வழிநடத்த

இந்தியாவுக்கு அழைப்பு

(நியுயோர்க்)

உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட யூகோஸ்லேவியாவுக்கு அனுப்பப்படவுள்ள ஐ. நா. சபையின் அமைதி காப்பு படையை இந்திய ஜெனரல் முன்நின்று நடத்தித் தரப்படவேண்டும் என்று ஐ. நா. சபை இந்தியாவைக் கேட்டுள்ளது. ஐ. நா. சபையின் இந்த பரிந்துரைக்கு இதுவரை இந்தியா பதில் அளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (மா)

புலிகளின் தாக்குதல் படை கொழும்பு வந்துள்ளதாம்!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சில முக்கிய இடங்களில் தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகளின் தாக்குதல் படையொன்று கொழும்பு வந்திருப்பதாக பாதுகாப்பு பிரிவுக்கு செய்திகள் கிடைத்துள்ளதாம்.

இதனைத் தொடர்ந்து கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தாக்குதல் படைப் பிரிவைச் சேர்ந்த சில அங்கத்தவர்கள் ஏற்கனவே மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு வந்திருப்பதாக தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்தார்கள்.

ஏற்கனவே மேல்மாகாணத்தில், புதிதாக இங்கு வருவோர் பற்றிய விபரம் சேகரிக்கப்படுவதோடு, தற்போது தேடுதலும், சோதனையும் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீனவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை 6-30மணியளவில் பூநகரி-கல்முனையிலுள்ள படையினர் பூவரசந்தீவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர்.

காலை 6-30 மணியளவில் குருநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி மண்டைதீவுப் படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். (56)

நினைவு தினம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஸ்தாபகரும் பிரபல சினிமா திரைப்பட நடிகருமான விஜய குமாரணதுங்காவின் நான்காவது நினைவுதினம் நேற்று கொழும்பில் நினைவுகூரப்பட்டது. (மா)

வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு தாக்குதலின் போது கடந்த வெள்ளிக்கிழமை காயமடைந்திருந்த லெப். ஈழமணி (மு. மனோகரன் களுவாஞ்சிக்குடி) நேற்று முன்தினம் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

மட்டக்களப்பில் மற்றுமொரு சம்பவத்தில் கடந்த வியாழன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலிகள் பதுங்கியிருந்து ராணுவத்தினரை முகாம் நோக்கி பின்வாங்கச் செய்தனர். இத்தாக்குதலின் போது வீரவேங்கை அல்லியன் அல்லது மதுரநாதன் நடராஜா இந்திரன் (செங்கலடி கொடுவாமடு) வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

இவ்விரு வீரவேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொண்டனர்.

முக்கிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை அல்லது அதற்கு மேலும் சில வேளைகளில் நீடிக்கப்படலாமென்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

நான்கு நாள் ஊரடங்கு தாக்குதலுக்கான ஆரம்ப நடவடிக்கையா என்றும் அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். (சி)

யாழ். நகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீது ஒரு "ஷெல்" வந்து வெடித்ததினால் ஒரு பழைய கட்டிடத்தின் சுவர்கள் இடிந்து விழுந்தன.

மண்டைதீவு முகாமிலிருந்து யாழ். நோக்கி 50 கலிபர் தாக்குதல்களும், துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன; துப்பாக்கிச் சன்னங்கள் யாழ். கொட்டடிப் பகுதியில் உள்ள வீடுகளுக்கு மேல் வந்து விழுந்தன.

கொட்டடிப் பகுதியில் உள்ள மக்கள் அவசர அவசரமாக சிறு சிறு முடிச்சுக்களோடு, பாதுகாப்புக்காக பாதுகாப்பு வலைத்தினுள் வந்து கூடினர்; அநேகமானவர்கள் பொது மருத்துவமனைப் பகுதிக்குள் வந்து தஞ்சமடைந்தனர்.

பாசையூர், குருநகர் போன்ற கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தங்கள் இருப்பிடங்களைவிட்டு பாதுகாப்புக்காக இடம்பெயர்ந்து நல்லூர் போன்ற இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

இத்தாக்குதல் நேற்று அதிகாலை 3-30 மணியில் இருந்து 5-45 மணிவரை இடம்பெற்றிருந்தது.

இச்சமயத்தில் பூநகரி, கல்முனைப் பகுதியில் நிலைகொண்டுள்ள ராணுவத்தினரும் 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்; (சு, 56)

திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உதவிகளையும் பெற்றுக் கொண்டு, தமது சொந்த இடங்களுக்குச் செல்கின்றனர் என ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

தொண்டமான்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தமிழர் என்ற காரணத்தை வைத்து, அவரது ஆலோசனைகளைப் புறக்கணித்து உதாசீனம் செய்வது தவறாகும்; நாம் அந்த ஆலோசனைகளை விளங்கிக்கொள்ளாமல் கூச்சல் போடுவது அர்த்தம் அற்ற செயலாகும். (152)

இலங்கைத்

(1-ம் பக்க தொடர்ச்சி)

வேண்டுமென்றும் முகாமுக்கு வெளியே இலகுவாகச் செல்லக்கூடியதாக இருக்கவேண்டுமென்றும் கோரியே இவர்கள் உண்ணாவிரதமிருந்தனர்;

இவர்களின் உடல்நிலை மோசமடைந்ததையடுத்தே இவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாக முகாம் வட்டாரங்கள் தெரிவித்தன. [ரி]

வெளிநாட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக்குழு இலங்கை வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு உதவிகளும், கடன்களும் அவற்றின் நியதிகளுக்கமைய பயன்படுத்தப்பட்டு வருகின்றதா எனவும் இராணுவ நடவடிக்கைகளுக்கும் மனித உரிமை மீறல் தொடர்பான சம்பவங்களுக்கும் இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது என்பது பற்றியும் இந்தக்குழு முக்கியமாக ஆராயும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இனப் பிரச்னையைத் தீர்த்துவைக்க

பங்களாதேஷ் முயற்சி?

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னையில் தலையிட்டு சமரசம் செய்து வைக்க தெற்காசியஒத்துழைப்புக்கான சம்மேளனமான "சார்க்"கின் ஒத்துழைப்பை நாடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன;

வடக்கு கிழக்கில் காணப்படும் தொடரும் இனஉணர்வுகளை தீர்த்துவைக்க பங்களாதேஷ் சமரசம் செய்துவைக்கக் கூடுமென்றும் கொழும்பில் அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர். (ரே)

தனிச் சிங்களத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அனுப்பியுள்ளது;

பரீட்சைத் திணைக்களத்தில் தமிழ்மொழியில் கடமையாற்ற போதிய தமிழ் ஊழியர்கள் இல்லாததினால்தான் இந்த நிலை ஏற்பட்டதாக பரீட்சைத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (152)

திருமலை கிராமங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லடி ஆகிய கிராமங்கள் ராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டதாக அறிய வருகிறது;

இச்சுற்றிவளைப்பின் போது இரண்டு தமிழர்களை படையினர் சுட்டுக்கொன்றனர். பத்துக்கு மேற்பட்டோர் துப்பாக்கிச் சூட்டினால் காயப்பட்டனர்.

அத்துடன் அங்கு பல கடைகள், வீடுகள் தீமூட்டி எரிக்கப்பட்டன. சேதம் சுமார் இரண்டு லட்சம் என தெரிவிக்கப்பட்டது;

மரண அறிவித்தல்

திரு. வயிரவப்பிள்ளை சபாபதி

(Retired Textile Inspector)

கந்தி ஒழுங்கை, அரசடி றோட்டைச் சேர்ந்த வயிரவப்பிள்ளை சபாபதி அவர்கள் ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற அன்னபகவதியின் அன்புக்கணவரும், சக்திகுமார் (பிரான்ஸ்), சக்திமதி, சதாமதி (கனடா), சாந்திமதி, சித்ரமதி (மாணவி - கோப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும், இராதாக்கிருஷ்ணன் (பட்டதாரி), சண்முகநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சபிபிருந்தா, மதுரன் ஆகியோரின் ஆசை பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று 17-ம் திகதி திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் தீயுடன் சங்கமமாகும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுக்கொள்கின்றேன்.

தகவல்: கா.இராதாக்கிருஷ்ணன்,
(மருமகன்)

53/14, கந்தி ஒழுங்கை,
அரசடி றோட்,
யாழ்ப்பாணம்.

(ஏ-5981)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/81.